International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 01 January to March 2020 www.irjtsjournal.org

# வாரிக் கொடுத்த கடையெழு வள்ளல்கள்

**மு.கயல்விழி**

*உதவிப் பேராசிரியர்,*

*தமிழ்த் துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்.*

முன்னுரை:

“ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு”

(குறள்:231)

என்றார் வள்ளுவர் பெருந்தகை. பிறருக்கு ஈந்து வாழும் வாழ்வே மனித வாழ்வுக்கு ஊதியமாக அவர் கருதினார். ஈதல் அல்லது கொடை என்பதை நம் அறிவு சார்ந்த முன்னோர்கள் வாழ்வின் இன்றியமையாத ஒன்றாகக் கருதினர். எனவேதான் விருந்தோம்பல் என்ற பண்பாடு பழந்தமிழரிடத்து சிறந்து விளங்கியது. கொடையும், விருந்தோம்பலும் இவ்வுலக வாழ்வுக்கு மட்டுமல்லாது மேலுலக வாழ்வுக்கும் பயன்தரத்தக்கது என்பதே தமிழரின் கோட்பாடு. இவற்றால்தான் பழந்தமிழ் இலக்கியங்கள் பல்லாற்றானும் இது குறித்து மக்களுக்கு அறிவுருத்தியது. அறிவு சார்ந்த நம் முன்னோர்கள் இவ்விதமான கொடை வாழ்வு வாழ்ந்து சிறந்த கொடையாளிகள் என்று பெயர் பெற்றனர். கொடையாளி என்றவுடன் படித்தவன் முதல் பாமரன் வரை மகாபாரதத்தின் கர்ணனையே சுட்டுவர். ஆனால் அவனை விட பன்மடங்கு கொடை உள்ளம் கொண்ட கடையெழு வள்ளல்களையும், குமணன், நல்லியக்கோடன் போன்ற கொடையாளிகளையும் இன்னமும் முழுமையாக தமிழுலகம் அறியாதது வியப்புக்குரியது.

சங்க இலக்கியங்கள் மட்டும் கடையெழு வள்ளல்களைப் பற்றி பதிவு செய்யவில்லையென்றால் அப்படி ஒருவர் வாழ்ந்தார் என்பதையே உலகம் அறியாமல் போயிருக்கும். கர்ணனைத் தமிழுலகம் கொண்டாடுவது என்பது ஆரியமும், இதிகாச புராணங்களும் எந்த அளவுக்கு தமிழ் மக்கள் உள்ளத்தில் வேரூன்றியுள்ளது என்பதை உணர்த்தும். ஆரியர்கள் உலகில் கொடை வள்ளல் என்றால் கர்ணனை மட்டுமே சுட்டுவர். ஆனால் தமிழுலகில் கடையெழு வள்ளல்களும், இன்ன பிற கொடையாளிகளும் வாழ்ந்ததை இலக்கியங்கள் சுட்டிச் செல்லும். தமிழ்ச் சான்றோர்கள் செம்மையான வாழ்வியல் நெறியை மக்களுக்கு உணர்த்தியதால் அக்காலத் தமிழர்கள் சிறப்பான வாழ்வு வாழ்ந்து மறைந்தனர். இதைக் கொடை வழங்கிய வள்ளல்களின் வாழ்விலிருந்து அறிந்து கொள்ளலாம். இது தவிர கொடைப் பெற்ற புலவர் பெருமக்களும் தாம் பெற்ற கொடையின் சிறப்பைத் தம்

இலக்கியங்களில் பதிவு செய்து விட்டுச் சென்றனர். சங்க காலத்தில் வாழ்ந்த கடையெழு வள்ளல்களைப் பற்றி ஆராய்வது என்பது நம் முன்னோர்கள் கடைபிடித்து வாழ்ந்த செம்மையான பண்பு நலன்களை மீள அறிந்து இன்புறுவதாகவே அமையும்.

கடையேழு வள்ளல்கள்:

கடையெழு வள்ளல்கள் சங்ககாலத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் ஒரே காலத்தையோ, ஓரே இடத்தையோ சார்ந்தவர்கள் அல்லர். பிறருக்குத் தடையில்லாமல் ஈயும் நல்லியல்பு கொண்டவர்களையே வள்ளல்களாக அக்காலத்தில் கருதினர். கடையெழு வள்ளல்கள் என்ற அடைமொழியே அவர்கள் எழுவர் என்பது உணர்த்தும். ஆனால் அவர்கள் யாவர் என்பதில் கருத்து வேறுபாடுகள் உள. சிறுபாணற்றுப் படையை இயற்றிய நல்லூர் நத்தத்தனார் என்ற புலவர் பெருமான் பேகன் முதலிய கடையெழு வள்ளல்கள் மறைந்த பின் ஓய்மான் நாட்டு நல்லியக்கோடனே வள்ளலாகத் திகழ்ந்தான் என்று கூறுவார் (புறம்:158). அவர் கடையெழு வள்ளல்களின் பெயர்களைத் தம் நூலில் பதிய விட்டுள்ளார். அவர்கள் வருமாறு:-

1. பேகன்
2. பாரி
3. காரி
4. ஆய்
5. அதியமான்
6. நள்ளி
7. ஓரி

மற்றொரு புலவர் பெருமானான பெருஞ்சித்திரனார் என்பவர் குமணனைக் கண்டு பாராட்டி பாரி முதலிய எழுவரின் மறைவுக்குப் பின் நீயே வள்ளலாகத் திகழ்கிறாய் என்று பாராட்டுவார். அத்துடன் கடையெழு வள்ளல்களைப் பாராட்டி பட்டியலிட்டுள்ளார். அவர்கள் வருமாறு:-

1. பாரி
2. ஓரி
3. காரி
4. எழினி
5. பேகன்
6 ஆய்
7. நள்ளி

எனவே இருவேறு புலவர் பெருமக்கள் கூறிய கருத்தினின்று இரண்டு உண்மைகள் புலனாகின்றன. ஒன்று, கடையெழு வள்ளல்கள் யார் என்பதில் புலவர்களுக்குள்ளே கருத்து மாறுபாடு இருந்தது. இரண்டு, கடையெழு வள்ளல்களைத் தவிர குமணன், நல்லியக்கோடன் போன்றோரும் பெருவள்ளல்களாக அக்காலத்தில் திகழ்ந்தனர். கடையெழு வள்ளல்கள் வாழ்ந்தது உறுதி என்பதுடன் தமிழகத்தில் பல நூற்றாண்டுகள் அவர்களது புகழ் நீடித்து நிலைத்தது என்பதை

“கொடுக்கி லாதனைப் பாரி யேஎன்று
கூறி னுங்கொடுப் பாரிலை”

என்று கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் பாரியைப் புகழ்வதினின்று அறிந்து கொள்ளலாம்.

பாரி:

இவன் பறம்பு மலைக்குச் சொந்தக்காரன். வேட்டைக்குச் சென்ற வழியே படர்வதற்கு தவித்த முல்லைக் கொடிக்குத் தன் தேரையே ஈந்தவன் (சிறு:87-89). செந்தமிழ்க் கவிராயரான கபிலரின் ஆருயிர் நண்பன். இவன் வளமையான பறம்பு நாட்டுக்குச் சொந்தக்காரன் என்று இலக்கியங்கள் உணர்த்தும் (புறம்:117-118, 170). அவன் தன் பறம்பு நாட்டில் உள்ள முன்னூறு ஊர்களை தன்னை நாடி வந்த இரவலருக்குப் பரிசிலாக வழங்கிய பெருமையை உடையவன். இவன் ஆடிக்கொண்டு வரும் கூத்தருக்கும், பாடிக்கொண்டு வரும் புலவருக்கும் வாரிவழங்கும் நல்லியல்பு கொண்டவன். எனவே இவனைப் புகழ்ந்த புலவர் “பாரி” “பாரி” என்று மகிழ்ந்து பாராட்டுவர். இவனது கொடைத் தன்மையைக் கண்டு அழுக்காறு கொண்ட மூவேந்தர்களும் இவனது பறம்பு மலையை முற்றுகையிட்டனர். ஆனார் இப்போரில் அம்மூவரையும் தோற்கடித்து விரட்டிய வீரம் கொண்டவனாகப் பாரி திகழ்ந்தான் (அகம்:78). பாரியைப் பற்றியும் அவனது நாட்டைப் பற்றியும் கபிலர் (நற்:253), மிளிக்காந்தன் (குறுந்:196), ஔவையார் (அகம்:303), புறத்திணை நன்னாகனார் (புறம்:176) போன்ற புலவர்கள் புகழ்ந்துப் பாடியுள்ளனர்.

மலையமான் காரி:

இவன் மலைநாட்டைச் சார்ந்தவன். இவனது தலைநகர் திருக்கோவிலூர் ஆகும் (புறம்:69). இது தென் பெண்ணை ஆற்றங்கரையின் தென் கரையில் அமைந்துள்ளது. இவன் அச்சம் தரும் நெடிய வேலை உடையவன். தன்னை நாடிவரும் இரவலருக்கு குதிரைகளையும் பொன்னையும் வாரி வழங்கியவன் (சிறு:91-95). தன்னிடம் இரந்து வந்த மூவேந்தருக்கும் பொருள் தந்து ஆதரித்தச் சிறப்பினை உடையவன் (புறம்:127-128). இவன் சேரமன்னனின் ஆருயிர் நண்பனாகத் திகழ்ந்தான். சேரனுடைய பகைவனான மலைநாட்டின் வல்வில் ஓரியைத் தோற்கடித்துக் கொன்று அவனது கொல்லி மலையைச் சேரனுக்குப் பரிசிலாக அளித்தான் (அகம்:209). இதன் மூலம் இவன் சிறந்த போர்

வீரன் என்பது புலனாகின்றது. கபிலர் (குறுந்:312), அம்மூவனார் (அகம்:35), பெருஞ்சித்திரனார் (புறம்:158), மாறேகத்து நப்பசலையார் போன்ற புலவர்கள் இவனைப் பாடிச்சென்றுள்ளனர்.

ஆய்:

இவன் வெண் பொதிகை மலையை உரிமையாகக் கொண்டவன். கையில் தொடியையும், காலில் வீரக்கழலையும் அணிந்தவன் (புறம்:128). கழுத்தில் சுரபுன்னை மாலையை அணிந்தவன் (புறம்:131). நீலநாகம் இவனுக்கு அன்புடன் வழங்கிய அதிசய கலிங்கத்தை சிவனுக்கு வழங்கிய சிறப்புடையவன் (சிறு:96-99). பரிசில் வேண்டி தன்னை நாடி வந்த அனைவருக்கும் எண்ணிறைந்த யானைகளைத் தந்து உபசரித்தவன் (புறம்:128-131). இவன் வலிமையான விற்படையை உடையவன். இவன் தன் நாட்டின் மீது படையெடுத்து வந்த கொங்கர் என்ற பகைவரை தோற்கடித்து விரட்டியவன் (புறம்:130). தன்னை நாடி வந்த முத்தமிழ் அறிஞர்களுக்குத் தேர்களையும் (நற்:167), விறலியருக்கு மிடாச்சோற்றையும் (அகம்:152) வழங்கிய சிறப்புடையவன்.

அதியமான்:

இவன் அதியமான் நெடுமான் அஞ்சி என்று அழைக்கப்பட்டவன். இவன் கொல்லிக் மலையை குட்டநாடு வரை உள்ள பகுதியை ஆட்சி செய்தவன். இவன் மழவர் இனத்தவன் என்பதை ஔவையார் மூலமாக அறியலாம் (புறம்:88-90). கொல்லி மலையை ஆண்ட ஓரியும் மழவர் இனத்தவனே. உயர்ந்த மலையில் தனக்கு கிடைத்த அரிய நெல்லிக் கனியை ஔவைக்கு அளித்து மகிழ்ந்தவன். இக்கனி உண்பவர் நீண்ட நாள் இளமையுடன் வாழும் இயல்பினர் (சிறு:99-103). இவன் முதன் முதலாக கரும்பைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்த சிறப்பையுடையவன் (புறம்:99). இவன் பாணர் மற்றும் கவிஞர்களுக்கு வாரி வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தான். இவனிடம் வலிமையான யானைப்படையும் குதிரைப்படையும் இருந்தது (நற்:381). காஞ்சியை ஆண்ட தொண்டைமான் இளந்திரையனுக்கும் இவனுக்கும் இடையே போர் மூண்ட போது ஔவையார் தூதராகச் செயல்பட்டு சமரசம் செய்து வைத்தார் (புறம்:95).

நள்ளி:

இவன் மலைநாட்டைச் சார்ந்த பெருவள்ளல் ஆவான் (சிறு:103-107). இவனது நாடு கண்பீர நாடு ஆகும். எனவே இவன் “கண்பீரக்கோ” என்று இலக்கியங்களால் புகழப்பட்டவன் (புறம்:148). வன் பரணர் என்ற புலவர் பெருமானுக்கு காட்டில் தான் அணிந்திருந்த அனைத்து அணிகலன்களுடன் தான் வேட்டையாடிக் கொணர்ந்த உணவுப் பொருள்களையும் அளித்து மகிழ்ந்தவன் (புறம்:150). தன்னை நாடிவரும் புலவர்களுக்குப் பொன் நகையை யும், தேர்களையும், களிறுகளையும் பரிசாக வழங்கும் இயல்பினன் (அகம்:238). பெருஞ்சித்திரனார் என்ற புலவர் இவன் புலவர்களின் வறுமையைத்

தொலைப்பவன் என்று புகழ்ந்துரைக்கின்றார் (புறம்:158). இவனைக் கபிலர், பரணர், காக்கைப் பாடினியார், நச்செள்ளையார் போன்ற புலவர் பெருமக்கள் தம் பாக்களால் பாராட்டியுள்ளனர்.

வல்வில் ஓரி:

இவனது நாடு கொல்லிமலை. இது இயற்கை வளம் நிரம்பியது. கொல்லி மலையில் அழகுக்கு பெயர் போன கொல்லிப்பாவை காணப்பட்டது (குறுந்:100). இவன் "வல்வில் ஓரி" என்றும், "ஆதன் ஓரி" என்றும் அழைக்கப்பட்டான். தான் போரில் வென்ற நாடுகளையெல்லாம் கூத்தருக்கே வழங்கிய சிறப்புடையவன் (சிறு:107-111). இவன் அம்பு எய்துவதில் வல்லவனாகத் திகழ்ந்ததால் "வல் வில்" என்று சிறப்பிக்கப் பட்டான் (புறம்:152). இவன் எய்த ஓர் அம்பு முதலில் யானையைத் துளைத்து, பின்பு புலியைத் துளைத்தது, அதன் பின் புள்ளி மானையும் துளைத்து. அத்துடன் நில்லாமல் ஆண் பன்றியையும் கிழித்துக் கொண்டு சென்று, இறுதியாக உடும்பின் உடலையும் துளைத்துச் சென்றது (புறம்:152). இவன் பசும் பொன்னையும், வளைந்த கடகங்களையும் அணிவதில் பெரு விருப்புடையவன் (புறம்:153). இவன் விறலியருக்கு மான் இறைச்சியையும், மதுவையும், பொன்னையும் மணியையும், யானைகளையும் தந்து மகிழ்ந்தவன் (புறம்:153). சேரனுடைய ஆணையால் இவன் மலையமான் காரியால் தோற்கடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டான் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம் (நற்:230). இன்று கூட இராசிபுரத்தில் உள்ள விஸ்வநாதர் கோயிலில் வில்லேந்தி வீரத்துடன் நிற்கும் வல்வில் ஓரியின் சிலையைக் கண்டு மகிழலாம்.

பேகன்:

இவன் மலை நாட்டைச் சார்ந்தவன். இவன் நாடு பெரிய மலைச் சிகரங்களையுடையது என்று புலவர் உரைப்பர் (புறம்:158). இவனது மலை போதினி மலை என்று அழைக்கப்பட்டது (அகம்:61). இவனது குடி ஆவியர் குடியாகும். இவன் காட்டில் திரிந்த மயில் அகவியதைக் கேட்டு அது குளிரால் நடுங்கியதாகக் கருதி அதன் மீது தன் போர்வையைப் போர்த்திய அருளாளன் (சிறு:84-88). இவன் சிறந்த கொடையாளியாகத் திகழ்ந்தபோதிலும் யாது காரணத்தாலோ தன் மனைவியை விட்டுப் பிரிந்து வாழ்ந்தான் (புறம்:143-147). இவனை கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் போன்ற புலவர் பெருமக்கள் நேரில் கண்டு வாழ்த்தி பரிசில் பெற்றனர். பேகனைக் காணும் முன் கலைஞர்களுக்கு இருந்த வறுமையானது பேகனைக் கண்ட பின் நில்லாதொழியும் (புறம்:141). தன்னை நாடிவரும் அனைவருக்கும் வாரிவழங்குவதில் வல்லவனாக இவன் திகழ்ந்தான். இவனைச் சில புலவர்கள் "வேள் ஆவி" என்றும் அழைத்தனர். புறநானூற்றுப் பாடல்களில் இவனை "வையாவிக் கோப் பெரும் பேகன்" என்று சுட்டுவதன் மூலம் இவன் சிறப்பு விளங்கும்.

முடிவுரை:

"பாத்திரம் அறிந்து பிச்சையிடு" என்பது பொருள் பொதிந்த முதுமொழியாகும். இவற்றால் நம் முன்னோர்கள் ஈவதும் சரியான நபருக்கே ஈயவேண்டும் என்று வகுத்தளித்தனர். தானம் வழங்கும் பொருள் உரிய நபருக்குப் போய்ச் சேர்தால்தான் அது சரியான முறையில் பயன்படும். இதிகாசக் கர்ணனைக் கொடை வள்ளலுக்கு உதாரணம் கூறும் நபர்கள் அவன் கொடையளித்த நபர்கள் கொடைபெறத் தக்கவர்களா என்று சிறிதும் எண்ணிப் பார்க்காததை ஈண்டு எண்ணலாம். அவனிடம் கொடைப் பெற்ற இந்திரன், குந்தி, கிருஷ்ணன் போன்றோர் தமது சுயநலத்தால் உந்தப்பட்டு அவனிடம் கொடை வேண்டி நின்றனர். எனவே அவர்கள் கொடைபெறத் தக்கவர்கள் அல்லர். இதனால் கர்ணன் அளித்த கொடையாவும் அவனுக்கு நன்மை வழங்குவதற்குப் பதில் தீமையே பயத்தது. மாறாகக் கடையெழு வள்ளல்கள் கொடை வழங்கிய நபர்கள் யாவரும் வறுமையின் கோரப்பிடியில் சிக்கிய கலைஞர்களான புலவர்கள், கூத்தர்கள், பாணர்கள், விறலியர்கள் போன்றவராவர். இவர்கள் யாவரும் அடித்தட்டு மக்கள் என்பதுடன் யாண்டும் வறுமையின் கோரப் பிடியில் சிக்கித்தவித்தவர்கள். எனவே அவர்கள் யாசகம் வேண்டி வள்ளல்களை நாடி நின்றனர். கடையெழு வள்ளல்களும் தம் அகமும், முகமும் கோணாது அவர்களுக்கு வாரி வழங்கி அவர் தம் துன்பத்தை தற்காலிகமாக நீக்கினர். இவற்றால் தமிழ் வள்ளல்கள் சரியான நபருக்கே கொடை வழங்கி தம் அறிவுடைமையை நிலை நாட்டினர் என்பது புலனாகும்

கடையெழு வள்ளல்கள் அளித்த கொடைகள் சில நகைப்புக்கு உரியன. சான்றாக பாரி வள்ளல் முல்லைக் கொடிக்குத் தேர் வழங்கியதையும், பேகன் மயிலுக்குப் போர்வை வழங்கியதையும் கொள்ளலாம். ஆனால் அவ்வள்ளல்களின் கொடை உள்ளத்தையும், இரக்க குணத்தையும், அன்பு நெஞ்சத்தையும் எண்ணிப் பார்க்கும் பொழுது எள்ளி நகையாடுவதற்கு மாறாக அவர்கள் மீது மதிப்பும், மரியாதையுமே தோன்றுகின்றது. பிறருக்கு வாரி வழங்குவதற்கு இரக்க குணமும், பொன் போன்ற உள்ளமும் தேவை. அது கடையெழு வள்ளல்களிடத்து தாராளமாய் இருந்தது. அவ்வுள்ளமே இன்றும் நாம் அவர்களைப் போற்றிச் சிறப்பிப்பதற்குக் காரணமாய் அமைந்தது. கடையெழு வள்ளல்கள் பண்டைய தமிழரின் ஈகை, கொடை மற்றும் விருந்தோம்பல் போன்ற நற்குணங்களுக்குச் சான்றுகளாக இலக்கியங்களில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

பார்வை நூற்பட்டியல் (Bibliography):-

[1] Pillai.K.K.(1969) A Social History of The Tamils, Chennai: University of Madras.

[2] Swaminathan.A,(1991),Social and Cultural History of Tamil Nadu, Chennai: Deepa Publications.

[3] பிள்ளை.கே.கே. (1977) , தமிழ் நாட்டு வரலாறு- மக்களும் பண்பாடும், சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

[4] தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம்,(1983),சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

[5] அகநானூறு,(2007),சென்னை, நியூ சென்சூரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்

[6] புறநானூறு, (2007),சென்னை, நியூ சென்சூரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்

[7] நற்றிணை, (2007),சென்னை, நியூ சென்சூரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்

[8] குறுந்தொகை,(2007),சென்னை, நியூ சென்சூரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்

[9] சிறுபாணாற்றுப் படை,(2007),சென்னை, நியூ சென்சூரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்.